## 25. உவமவியல் 3731

(உவமைகளைப் பற்றிக் கூறும் பகுதி)

### உவமைப் பாகுபாடு

1222. வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்.

### அவை விரவியும் வரும்

1223. விரவியும் வரூஉம் மரபின என்ப.

### உயர்ந்தவையே உவமையாக வரும்

1224. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை.

### உவமை தோன்றும் நிலைக்களன்கள்

1225. சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நால் பண்பும் நிலைக்களம் என்ப.

### வேறு களன்

1226. கிழக்கிடுபொருளொடு ஐந்தும் ஆகும்.

### முதலும் சினையும் பற்றி வருதல்

1227. முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய.

### உருபு இன்றியும் வருதல்

1228. சுட்டிக் கூறா உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.



வினையாகிய தொழில், பயன், மெய்யாகிய வடிவம், உருவாகிய நிறம் ஆகிய நான்கு வகையாக, உவமைகள் தோன்றும். புலிபோல் பாய்ந்தான், மழை விழை தடக்கை, வேய் மருள்பணைத்தோள்; தாமரைச்சேவடி. 1

நான்கும் தனித்தனியாக வருவதோடு சேர்ந்தும் வரும். செவ்வான் அன்னமேனி, அவ்வான் இலங்கு பிறை அன்ன இலங்கு வால்வை எயிறு. 2

உவமைப்பொருள் உயர்ந்ததாக இருக்க வேண்டும். மாரி அன்ன வண்கை. 3

ஒரு பொருளின் சிறப்பு, அதன் நலன், அதன்மேல் கொண்டுள்ள பேரன்பு, அதன் வலிமை, இவைகள் உவமை தோன்ற நிலைக்களனாக அமையும். 4

எடுத்துக் கொள்ளுகின்ற பொருள் தாழ்ந்ததாக இருந்தாலும் அதனையும் சேர்த்து ஐந்தாகும். 5

முதற் பொருளுக்கும், சினைப் பொருளுக்கும் தொன்றுாலோர் கூறிய மரபின்படி உவமைகள் வரும். முலை போன்ற யானை; நெருப்பினன்ன சிறுகண் பன்றி. 6

உவமத்தைச் சுட்டிக் கூறவில்லை எனில் பொருள்களைப் புணர்த்திக் கொள்ளலாம். பவளச் செவ்வாய் 7

## உவமையின் சிறப்பியல்புகள்

1229. உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

1230. பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்.

1231. பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பாடுடைய.

## உவம உருபுகள்

1232. அவைதாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை எனாஅ
ஆறுஆறு அவையும் அன்ன பிறவும்
கூறுங்காலைப் பல்குறிப்பினவே.



உவமானமும் பொருளும் தம்முள் ஒத்து அமைதல் வேண்டும். மயில்தோகை அன்ன கூந்தல். 8

பொருளை உவமமாகக் கூறினாலும் அதுவும் உவமையே. வருமுலை அன்ன வண்முகை யுடைந்து திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை (சிறுபாண்-72). 9

பெரிய பொருளையும் சிறிய பொருளையும் இணைத்துக் கூறினாலும் சிறப்புக் கருதி ஏற்றுக் கொள்ளலாம். மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப் பசு வெண்திங்கள், தோன்றியாங்குக் கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல் (குறுந்-129). 10

அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, என்ற, வியப்ப, எள்ள, விழைய, இறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொருவ, பொற்ப, போல, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, புரைய ஆகிய முப்பத்தாறு உருபுகளும், அவை போன்றவையும் உருபுகளாக வரும். அவை இடைச்சொல்லாகித் தொக்கு வருவனவும், தொகாதே நிற்பனவும், வினைச்சொல்லாகி வேறுபட நிற்பனவும் எனப் பலவாம். அதனால் பல் குறிப்பினவே என்று கூறினார். 11

அவற்றுள் வினையுவம உருபுகள்

1233. அன்ன- ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்.

அவற்றுள் அன்ன என் உருபு

1234. அன்ன என் கிளவி பிறவொடும் சிவணும்.

பயன் உவம உருபுகள்

1235. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங்கு எட்டே பயனிலை உவமம்.

மெய் உவம உருபுகள்

1236. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று
அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.

உரு உவம உருபுகள

1237. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்த என்று
ஒத்து வரு கிளவி உருவின் உவமம்.

இவற்றின் பொருள் மரபு

1238. தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.



நால்வகை உவம உருபுகளுள், வினை உவமத்திற்கு அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு, இவை எட்டும் வரும். 12

அன்ன என்ற உவம உருபு வினை உவமம்போக, ஏனைய பயன், மெய், உரு இவற்றிற்கும் வரும். 13

எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ, இவை எட்டும் பயன் உவம உருபுகளாக வரும். மழை விழை தடக்கை; விண்பொரு புகழ் விறல் வஞ்சி. 14

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப, இவை எட்டும் மெய் உவம உருபுகள். நிகர்மலர் கடுப்ப; வேய்மருள் பணைத்தோள்; உரல் புரை பாவடி; கண்ணொடு நிகர்க்குங் குவளை. 15

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த, இவை எட்டும் உரு என்ற நிறத்தைக் குறிக்க வரும் உவம உருபுகள். இவை நிறம், சுவை, குணம், அளவு இவற்றிற்கும் பொருந்தி வருவதால் ஒத்து வருகிளவி என்றார். 16

நால்வகை உவம உருபுகளும் மரபின் வழிவந்தவை. அவற்றின் பொருள் உணர்த்தி நிற்கும். 17

### வேறுபாகுபாடு

1239. நாலிரண்டாகும் பாலுமாருண்டே.

### பிறிதொரு வகைப்பாகுபாடு

1240. பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப.

### உவமமும் பொருளும்

1241. உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே திறத்தியலான.

### அவற்றை உணரும் வகை

1242. உவமப் பொருளை உணருங்காலை
மரீஇய மரபின் வழக்கொடு படுமே.

### அவற்றில் இரட்டைக் கிளவி

1243. இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே.

### உள்ளுறை உவமம்

1244. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறுங்காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே.



வினை, வினைக்குறிப்பு, நன்மை, தீமை, வடிவு, அளவு, நிறம், குணம் என நான்கு, எட்டாகும் நிலைக்களன் என்பது கருத்தாகலாம். 18

பெருமை பற்றியும், சிறுமை பற்றியும் ஒப்புமை கொள்ளப்பெறும் உவமை, நகை, அழுகை, இளிவரல், மருட்கை அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற மெய்ப்பாடு/எட்டன் வழித்தோன்றும் என்று கூறுவர் புலவர். 19

உவமஞ் செய்யும் பொருளான் உவமிக்கப்படும் பொருளின் தன்மையை அறிந்து தெளிந்து கொள்ளும் இடமும் உண்டு. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து (குறள்-667). 20

உவமப் பொருளால் உற்றது உணர்வது நூலின் மருவி வந்த வழக்கொடு பொருந்தித் தோன்றும். தாமரை போலும் முகம் என்ற வழி அது பகலில் விரிந்து இரவிற்குவிந்து நிற்கும் நிலை கருதாமல் அதன் மலர்ச்சியையும் செவ்வியையும் கொள்ளுதல். 21

இரட்டையாக வரும் உவமம், உவமிக்கப்படும் பொருள் இரட்டையாக வரும் இடத்தாம். விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர் (குறள் - 410). 22

உவமையொடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்று தராது, உவம நிலங்களொடு பிறந்த பிறவிகளொடு சார்த்திநோக்கி, முற்கூறிய இயல்பில் கூறும்போது, தெளிவுடையோர் உணர்ந்து துணிவொடு கொள்வர். சோழன் - கோவலன், காவிரி - கண்ணகி, மாதவி - கங்கை போன்று (சிலம்பு - 7:2)..

### அதன் தொகை

1245. உவமப் போலி ஐந்தென மொழிப.

### அதன் வகை

1246. தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப.

### இத்திறத்தில் தலைவியும் தோழியும்

1247. கிழவி சொல்லின் அவளறி கிளவி
தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது.

### தலைவனும் பிறரும்

1248. கிழவோற்காயின் உரனொடு கிளக்கும்
ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்றே.

### இவ்வுவமைக்குரிய கூற்றுக்கள்

1249. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கின் தோன்றும் என்ப.

### தலைவி கூற்றிற்குரிய இடம்

1250. கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே.



உவமப் போலியாகிய உள்ளுறையுவமை ஐந்து வகைப்படும் எனக் கூறுவர். 24

கெடல்அரிய சிறப்பினையுடைய உவமப் போலியை விரிக்கின் வினை, பயன், உறுப்பாகிய மெய், உரு, பிறப்பு என்ற ஐந்து நிலையில் வரும் திறத்தினையுடையன என்று கூறுவர். 25

தலைவி உவமப் போலியைப் பயன்படுத்தினால அவள் அறிந்ததைச் சொல்லுவாள்; தோழி கூறினால் அந்நிலக் கருப்பொருளின்று கடந்து உரையாள். 26

தலைவன் உவமப் போலி கூறும் போது தன் அறிவுப் பரப்பினடிப்படையில் கூறுவான்; ஏனைய அகமாந்தர்க்கெல்லாம் நிலம் பற்றிய வரையறை இல்லை. 27

மகிழ்ச்சி பொருந்திய சொல்லும், துன்புறுதற்குரிய சொல்லும் உவமப் போலி கூறும்போது தோன்றும் என்று கூறுவர். 28

தலைவி உள்ளுறையை மருதம், நெய்தலாகிய இரண்டிடங்களில் பயன்கொள்வாள் என்பது ஒன்று. இன்பத்திலும் துன்பத்திலும் பேசுவாள் என்பது மற்றொன்று. தோழியிடமும் தலைவனிடமும் கூறுவாள் என்பது பிறிதொன்று. 29

### தலைமகன் கூற்றிற்குரிய இடம்

1251. கிழவோற்காயின் இடம் வரைவின்றே.

### தோழி முதலியோர் கூற்றிற்குரிய இடம்

1252. தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற்குரியர் கொள்வழியான.

### புறனடை - வேறுவகை உவமம்

1253. வேறுபடவந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கின் கொள்வழிக் கொளால்.

### உவமைக்கு மேலும் ஒரு முடிபு

1254. ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

### பின்னும் ஒரு முடிபு

1255. உவமத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

### உவமையில் வரும் ஐயம்

1256. தடுமாறு உவமம் கடிவரை இன்றே.

### அடுக்கிய உவமை

1257. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.

### அதன் கண் நிரல்நிறை முதலியன

1258. நிரல் நிறுத்தமைத்த நிரல் நிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே.



தலைவன் உவமப் போலியைப் பயன்படுத்தும் போது நில வரையறை இல்லை. 30

தோழியும் செவிலியும் காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தும் நிலையில் உள்ளுறை உவமத்தைப் பயன்படுத்துவர். கேட்போரைப் பொறுத்து அமையும். 31

மேற்கூறிய வினை, பயன், மெய், உரு என்ற வகையினின்றும் வேறுபடச் சான்றோர் செய்யுட்கண் வந்த உவம வெளிப்பாட்டினைப் பொருள் கொள்ளும் நெறிநோக்கிப் பொருத்திக்கொள்ளல் வேண்டும். 32

உவமமும் பொருளும் ஒவ்வாதென நீக்கிக் கூறலும் மருவி வந்த வழக்குத்தான். செங்கண் குவளையல்ல கொடிய கொடிய (சிலம்பு - 7:20). 33

உவமையை, அதன் தன்மை விளக்கிக் கூறலும் உண்டு எனக் கூறுவர், அதனாலாய பயனை மிகுத்துக்காட்ட விரும்பிய காலத்து; பாரி பாரி என்று பல ஏத்தி..... மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே (புறம் - 107). 34

ஐயநிலை உவமையாகத் தடுமாறி வரும் உவமமும் நீக்கும் நிலைமை இல்லை. மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ (கம்பன்). 35

அடுக்கி வரும் உவம வகை அத்துணை சிறப்பாகக் கருதப் பெறுவதில்லை. அதனால் அவை விடுத்தற்குரிய இயல்பினது. 36

நிரல்நிறுத்து அமைந்த நிரல் நிறை, சுண்ணம், வரம்பு செய்த நிலைமையொடு பொருந்தியவை, என மூன்றும் அல்லாத இடத்து. 37